புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# பழநிபாரதி கவிதைகளில் வலியும் வாழ்வும்

**ஆய்வாளர்**

**இரா.சிவகாமி,**
*முனைவர் பட்ட ஆய்வாளர் ,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, அரியலூர் - 621713.*

**நெறியாளர்**

*முனைவர் த.கார்த்திகேயன்,*
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, அரியலூர் - 621713.*

**ஆய்வுச் சுருக்கம்**

*கவிதைகள் மக்களுக்கு நெருக்கமாக இருக்க வேண்டும். அவர்களின் சிக்கல்களைப் பேச வேண்டும் என்கிற நோக்கத்தோடு படைப்பு செய்கிற இக்காலத்தில் அழகியலோடு சாதாரண மக்களின் வாழ்வியலையும் பேசுகிற கவிதைகளைத் தருகிறார் பழநிபாரதி. எப்போதாவது பெறுகிற மகிழ்வைக் காட்டிலும் எப்போதும் கிடைக்கிற துன்பங்களே மக்களுக்கு அதிகம் பழகி இருக்கின்றன. அத்தகைய துன்பங்கள் நிறைந்த வாழ்வை பழநிபாரதியின் வெளிநடப்பு எனும் கவிதை நூல் பதிவு செய்கிறது. பிரிந்தபடி தமிழும் இளமையும் போராளியின் கடைசீ துப்பாக்கி ரவையாகப் பயன்படுத்த சொல்லித்தருகிறது. ஏழை எளியவர்கள் முதலாளிகளிடம் படும் துன்பங்களுக்காக அழுகிறது. சாதாரண மக்களின் வலி நிறைந்த வாழ்வை மட்டும் சொல்லாமல் அதற்கான தீர்வுகளையும் முன்னிறுத்துகிறார் பழநிபாரதி.*

**முன்னுரை**

இலக்கியம் என்பது வாழ்வியலிருந்து படைக்கப்படுவது என்றால் மிகையில்லை. அதிலும் சமகால இலக்கியங்கள் சாதாரண மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. காலத்திற்குத் தகுந்தார் போல் படைப்புகளில் ஏற்படும் மாற்றங்களில் முக்கியமானது படைப்பில் பேசப்படுவது யார் என்பதுதான். மன்னர்களையும் தெய்வங்களையும் பற்றியப் படைப்புகள் எழுந்த நிலை மாறி சாதாரண மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் காலமாக நவீன காலம் இருக்கிறது. புதுக்கவிதையின் மிக முக்கிய மாற்றமானது எளிமைப்படுத்தப்பட்டது. மட்டுமல்லாமல் அது சமகால வாழ்வியலையும் பேசுகிறது என்பதே. அவ்வகையில் கவிஞர் பழநிபாரதி எழுதிய “தனிமையில் விளையாடும் பொம்மை”, ”வெளிநடப்பு” எனும் கவிதைத் தொகுப்புகள் சாதாரண மக்களின் வாழ்வியலை, வலியைப் பேசும் அற்புதப் படைப்புகளாக இருக்கின்றன. அப்படைப்புகளில் மக்களுக்கு எதிரான குற்றங்களையும் சிக்கல்களையும் விளக்கி மனிதமில்லா மனிதர்களைக் காட்சிப்படுத்துகிறார்.

**மனித வாழ்வு**

மனிதன் என்பவன் அன்பு வழியிலேயே பயணிக்கவேண்டும். அன்பு இல்லாதவர்கள் மனிதர்களாகவே இருக்க முடியாது என்கிற அளவுக்கு மனிதர்களின் முக்கியத் தகுதியாக மனிதநேயம் இருக்கிறது.

”அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு” [1]

என்பார் வள்ளுவர். மனித வாழ்வியலுக்கான அறம் வலியுறுத்துகிற எல்லா படைப்புகளும் மனிதர்கள் தங்களுக்குள் மனித நேயத்தோடான அன்பைப் பயன்படுத்த வேண்டும் என்கிறது. இன்றைய அவசர கால சூழலில் குழந்தைகள் தொடங்கி இயற்கை, பெண்கள் என எல்லா இடங்களிலும் மனித நேயம் மரணித்து கிடக்கிறது.

**வலி நிறைந்த வாழ்வும்**

சமூகத்தில் கலந்து கிடக்கிற வலியை, வாழ்வைப் பதிவு செய்யும் வெளிநடப்பு எனும் கவிதைத் தொகுப்பு மனித நேயமற்ற செயல்களைக் கட்சிப் படுத்தி வார்த்தைகளின் வழியே வலிக்கிறது என்றால் மிகையாகாது. மகிழ்வு தரும் இன்பத்தை விட துன்பங்கள் தரும் வலி அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆண் பெண் இருவரும் சேர்ந்து வாழ்கிற வாழ்வில் அதிகமான துன்பங்கள் பெண்களுக்கு என்றால் அது மிகையாகாது. குடிகாரக் கணவர்களிடமும் மாட்டிக்கொண்டு தவிக்கும் பெண்களின் வாழ்வை, அவர்களின் மனக்குமுறல்களையும் பதிவு செய்கிறது பழநிபாரதியின் கவிதை

”பசித்து சிணுங்குகிறது
தொட்டிலில் என் ஆறுதல்

கட்டிலில் கிடக்கிறது
மது வாசம் மாறாமல்

*என் களைப்பு*

*சூரியனையும் சந்திரனையும்*
*தொலைத்துவிட்டு*
*என் மார்பில்*
*முகம் புதைத்து*
*அழுகிறது காலம்*

*நான்*
*கைகள் இல்லாத*
*கருணையைப் போல்*
*திகைத்து நிற்கிறேன்......*

*இராட்சச முத்தங்களால்*
*என் வாலிபத்தில்*
*சுவாசம் திணறுகிறது.....*

*அவன் எனது*
*காயம்*
*நான் அவனது*
*சாம்பல் கிண்ணம்.'' [2]*

*மகிழ்வைத் தராத வாழ்வில் அவளுக்கு கிடைத்த மழலை மட்டுமே ஆறுதலாக இருக்கிறது. இவளின் துன்பம் கண்டு சூரியனையும் சந்திரனையும் தொலைத்துவிட்டு காலம் அழுகிறது. அவளோ கைகள் இல்லாத கருணையை போல் திகைத்து நிற்பதாக கவிதையை கண்ணீராக்குகிறார் பழனிபாரதி,*

**வறுமை வாழ்வு**

*வலி தருகிற வாழ்விற்கு பெரிதும் காரணமாய் இருப்பது வறுமை. வசதியானவர்களுக்கு கட்டமைக்கப்படும் இன்றைய உலகத்தில் ஏழைகளின் வாழ்வு வலி நிறைந்ததாகவே மாறி இருக்கிறது. மனித்நேயம் மரணித்த் வருமை வாழ்வை கவிதையாக்குகிரார்.*

*''முதலாளிக்கு*
*இளநீர் பறித்துப் போட*
*காலையில் போன அப்பா*
*வீடு திரும்பவில்லை இன்னும்.'' [3]*

*எனும் கவிதையின் கடைசி வரி வறுமையில் தவிக்கும் இன்றைய குழந்தைகளின் மொழி. கூலி வேலைக்கு சென்று திரும்பும் எண்ணற்ற தகப்பன்களின் வலி. குடும்பம் காக்க உழைக்கும் பெரியவர்களைத் தாண்டி குழந்தைகளின் உழைப்பைப் பேசும் பழநிபாரதியின் கவிதை*

*''குறைந்த கூலிக்கு*
*வியர்த்த குழந்தைகளை*
*இரத்த சாயம் போக*

*துவைத்துக் கிழித்த விபத்துகள்*
*சிவகாசி ஆலைகளில்...'' [4]*

*என்பதாக குழந்தை தொழிலாளர்களின் உயிர் வலியைச் சொல்கிறது.*

*''உயிர்களைக் காக்கும்*
*அம்மன் ஆலயத்தில்*

*குங்குமம் மணக்கும்*
*அம்மன் ஆலயத்தில்*

*அனாதை பிணமொன்று*
*அழுகிக் கிடந்தது*
*தெப்பக்குளத்தின் கடைசீ*
*படிக்கட்டில்.'' [5]*

*வாழ்வைத் தேடி கோவில்களில் கற்பூரம் விற்கும் குழந்தைகளின் துன்பத்தை, செருப்புகளுக்கு உத்தரவாதம் தந்து மனிதர்களை காக்க மறந்த கடவுள்களைத் திட்டுகிறார். மேலும் மனிதர்களை காக்க வேண்டிய கடவுளின் ஆலயத்தில் வறுமையால் வலி தாங்க முடியாது பிணமாக்கப்பட்ட மனிதர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார். கடவுளின் கொடையாக மானுட வாழ்வின் அர்த்தமாக பார்க்கப்படுவது குழந்தைகள் என்றால் மிகையில்லை. குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்கிற சொற்றொடர் தமிழ்ச்சூழலில் பரவலாக பார்க்கப்படுகின்றது. அது எல்லா குழந்தைகளுக்கும் பொருந்துமா என்பது கேள்விக்குறியே. குழந்தைகளை வியாபாரப் பொருளாக்கி நடக்கும் கொடுமைகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்துகிறார் பழநிபாரதி. அவரது சிவப்பு மஞ்சள் பச்சை என்கிற கவிதை குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளை வலியுறுத்துகிறது.*

*''போக்குவரத்து நெரிசலில்*
*பிச்சையெடுக்கும்*
*இந்த நடுத்தர வயது பெண்ணை*
*கவனிக்காமல் நகர முடியாது*

*அவளை கவனிக்காமல் நகர்வது*
*அவளது கையில்*
*பிச்சையெடுப்பதற்காக*
*வாடகைக்கு விடப்பட்டக் குழந்தையைக்*
*கவனிக்காமல் நகர்வதைப் போன்றது*

*அந்த குழந்தையைக்*
*கவனிக்காமல் நகர்வது*
*தாய்மையின் ஈனத்தை*
*கவனிக்காது நகர்வதைப் போன்றது*
*அழக் கூடாது என்பதற்காக*
*அதற்கு ஊட்டப்படும்*
*போதைப் பழக்கத்தைக்*
*கவனிக்காமல் நகர்வதைப் போன்றது..........'' [6]*

என்பதாக தொடரும் கவிதை, அதையும் கவனிக்காமல் நகர்வது போதை காட்டிப் பிழைக்கும் சமூக விரோதிகளைக் கவனிக்காமல் நகர்வதைப் போன்றது, சமூகத்தை கவனிக்காமல் நகர்வது உன்னையே நீ கவனிக்காமல் நகர்வதைப் போன்றது என்பதாகத் தொடர்ந்து குழந்தைகளுக்கான மனித நேயம் நசுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறது. குழந்தைகளை எப்படி கொண்டாடுகிறோம் என்பதைப் பற்றிய மற்றொரு கவிதை நம்மை யோசிக்க வைக்கிறது. ஒரு குழந்தைக்கும் தாய்க்கும் இடையே நடக்கிற செயலாக படைக்கப்பட்டுள்ள கவிதையில்

"புத்தர் சிலைக்கு முன்
சிறுநீர் கழித்துவிட்டான்
குழந்தை

அம்மா அவனை
அடித்துத் தூக்கி வந்தாள்

மறுபடியும்
புத்தருக்கு வைக்கப்பட்டிருந்த
ஒரு பூவை எடுத்து வந்து
அம்மாவிடம் கொடுத்தான்

அவள் சிரித்தாள்
அதன் தொடர்ச்சியாய்
அவனும் சிரித்தான்

புத்தரை விட
அழகாக இருந்தது
அந்தப் புன்னகை.!!" [7]

எனும் கவிதை எதைப் போற்ற வேண்டும் என்பதை வலிமையாகச் சொல்லிச் செல்கிறது.

**துன்பம் தீர்க்கும் இறையும் இயற்கையும்**

துன்பப்படும் மனிதர்களுக்கு உதவுவது மனிதநேயம். வசதியாக உள்ள ஒருவன் அருகில் துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்தே ஆகவேண்டும் என்பது சமூக நீதி. இருக்க இடமின்றி உடுக்க உடையின்றி துன்பப்படும் ஏழைகளுக்கு இறைவனே உதவுவதாக கவிதை வடிக்கிறார் பழநிபாரதி.

"கடவுள்கள் எல்லோரும்
அவனோடு
தொடர்பில் இருக்கிறார்கள்

சிவன் இயேசு பெருமாள்
லட்சுமி சரஸ்வதி அனுமார்
பிள்ளையார் கன்னிமேரி

இடத்திற்குத் தகுந்தவாறு
அல்லது தேவைக்குத் தகுந்தவாறு
அவன் அவர்களை அழைப்பான்

அவன் வைத்திருக்கும்
வண்ண வண்ண சாக்பீஸ்களின் வழியே
அவர்கள் இறங்கி வருவார்கள்
தெருவோரம்.....

மற்றபடி
கடவுள்கள்தாம் அவனுக்கு
இட்லி வாங்கித் தருகிறார்கள்
தேனீர் வாங்கித் தருகிறார்கள்
வெண்சுருட்டு வாங்கித் தருகிறார்கள்

மற்றபடி
தங்களை அழைக்க
சாக்பீஸ்களையும்
தந்து போகிறார்கள்.''[8]

என்பதாக முடியும் கவிதையில் கடவுளைக் கண்ட மக்கள் காசுகளை இறைக்கிறார்கள். காசுகளின் வெளியே அவனது வாழ்க்கை நகர்கிறது என்பதை கடவுள் அவனுக்கு உதவுவதாக கூறுகிறார். கனவுகள் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன எனும் கவிதையில் பூங்காக்களை சுத்தம் செய்கிற சாதாரண கூலித் தொழிலாளியின் வாழ்வைப் பதிவு செய்கிறார். கனவுகளோடு காத்திருந்து உதிர்ந்த பூக்கள் எல்லாம் குப்பையாகி அந்த பூங்காவை நிறைக்கின்றன. எந்தவித பரிதாபமும் பெருமிதமும் இல்லாமல் அவற்றைச் சுத்தம் செய்கிறான்.

''களைத்த உடலாற்ற
கல்லிருக்கையில்
கால் நீட்டிப் படுத்திருக்கிறான்

அவன் மீது
மெதுவாக
மிக மிக மிக மெதுவாக
உதிர்ந்து கொண்டே இருக்கின்றன
பூக்கள்.''[9]

என்பதாக அவனின் உழைப்பை மதித்த மரங்கள் அவனுக்கு பூக்கள் தூவி மரியாதை செய்து மனித நேயத்தோடு நடந்து கொள்கின்றன என்று பதிவு செய்கிறார். மலர்களே மனித நேயத்தை வளர்க்கும் போது மனிதர்களும் வளர்க்க வேண்டுமென மறைமுகமாகச் சுட்டிச் செல்கிறார் பழநிபாரதி

**பெண் வாழ்வு**

மனிதம் பற்றி பல இடங்களில் பேசுகிற பழநிபாரதி பெண்களுக்கு எதிரான குற்றங்களை வலியோடு பதிவு செய்கிறார். அந்தக் குற்றங்களைச் செய்ததில் புத்தருக்கும் பங்கு உண்டு என்கிறது முத்தம் மரணம் கச்சாமி எனும் கவிதை.

"யசோதா
அந்த இரவில்
மூடிய உன்
இமைகளுக்குத் தெரியாமல்
நழுவியிருந்தான்
உன் கண்மணி

அன்று
நட்சத்திர ஆணிகளால்
அறையப்பட்டிருந்தது
உன் வானம்

வீடு பெண்ணுக்கு
வெளி ஆணுக்கு என
இன்னொரு முறை
எழுதப்பட்ட
அந்தக் கருப்பு ஒப்பந்தத்தில்
கட்டாயக் கையொப்பமானது
உன் வெண்ணிற கண்ணீர்......"[10]

என்பதாக புத்தன் ஞானி ஆனதால் பாதிக்கப்பட்ட யசோதாவின் கண்ணீரைப் பதிவுசெய்கிறார். புத்தன் யசோதாவை விட்டு விட்டு ஞானியானது அந்த பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்பதாகவே கருதுகிறார். அகம் புறம் அவள் எனும் மற்றொரு கவிதையில் சமகால நடிகைகளின் வாழ்வை, வலியை அழகாகப் பதிவு செய்து அவர்களுக்கு எதிரான மனிதநேயமற்ற செயல்களைக் கவிதையாக்குகிறார். நடிகை என்பதால் பரப்பப்படுகிற வதந்திகளையும் அதனால் ஏற்படுகிற பாதிப்புகளையும் மனிதநேயமிக்க மனிதர்கள் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தும் அக்கவிதை

"அவளது கைப்பேசிக்குள்
தனது அடிவயிற்றின் வலியை
தோழியின் மரணத்தை அல்லது
ஒரு குழந்தைக்குப் பிறந்தநாள் வாழ்த்தைப்
பகிர்ந்து கொண்டிருக்கலாம்

கைப்பேசிக்கு வெளியில்
வதந்திகளைப் பரப்பாதீர்கள்......"[11]

எனும் கவிதை மேலும் அவளுடைய வீட்டிற்குள் படப்பிடிப்புத் தளத்தில் அவள் நடந்து கொள்ளும் விதம் பற்றி தவறான செய்திகளைப் பரப்ப வேண்டாம். அவளின் உடல்மொழியை அறிந்த நீங்கள் இதயத்தின் குரலைக் கேட்டதே இல்லை. அழகான

*கண்கள் அழாது என்பதில்லை தயவுசெய்து கண்ணீரைக் கடந்து வதந்திகளைப் பரப்பாதீர்கள். எனச்சொல்லி இன்றைய நடிகைகளின் மனக்குமுறலை வெளிப்படுத்துகிறார்.*

***நேயமில்லா இன அழிப்பு***

*அதிகார சண்டையில் மனிதர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு மரணிக்கும் மனிதநேயத்தை கவிதைகளில் வார்க்கிறார் பழநிபாரதி. கொத்துக் கொத்தாக தமிழர்கள் கொன்று அளிக்கப்பட்ட ஈழச் சண்டை பற்றிப் பேசுகிற அவரது கவிதை அழுகிறது.*

*"செஞ்சோலையில்*
*சருகுகளாய் அள்ளுகிறோம்*
*குழந்தைகளை*
*இது இலையுதிர் காலம் அல்ல....."[12]*

*என்பதாக தொடரும் கவிதை இலங்கையில் நடந்த பல்வேறு சிக்கல்களை மனிதநேயமற்ற செயல்களை விவரிக்கிறது. இறந்தவர்களின் மழை எனும் மற்றொரு கவிதையில்*

*"குடமுருட்டி ஆறு*
*உடலுருட்டி ஓட*

*பதுங்கு குழியிலும்*
*நாங்கள்*
*ஒதுங்கமுடியாத மழையில்*
*நடக்கிறது யுத்தம்*

*தப்பித்தவர்கள்*
*தட்டு தடுமாறும் இருட்டில்*
*விளக்கெடுத்துப் பார்க்கையில்*
*செத்துக் கிடக்கின்றன செல்லங்களும் சொந்தங்களும்.....*

*இறந்த குழந்தையின் மேல்*
*எரியும் நெருப்பே*
*எரிந்து கொண்டிருக்கிறது*
*அவர்களுக்கான*
*தீபமாகவும்."[13]*

*எனும் கவிதை கடைசி வரியில் கனத்த சோகத்தைச் சொல்லி உலகமும் மனிதர்களும் பின்பற்ற வேண்டிய மனித நேயத்திற்கான வழிகாட்டுதல்களைக் குறிப்பிடுகிறது.*

***நிறைவுரை***

*இன்றைய சமூக வெளியில் நடைபெறுகிற அத்தனை துன்பங்களுக்கும் காரணம் மனிதநேயம் இல்லாத செயலே என்பதை மானுட வலிகளின் மூலம் காட்சிப்படுத்துகிறார் பழநிபாரதி. சம கால வாழ்வியலில் மக்கள் படும் துன்பங்களை கவிதைகளின் வடித்து துன்பங்களைக் கண்டும் காணாமல் போகிற மனிதர்களை*

கேள்விகேட்டு மனித நேயத்தின் அவசியத்தை அழகாக கவிதை ஆக்குகிறார் பழநிபாரதி. குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தொடங்கி பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் காட்சிப்படுத்தி கவிதையாக்கியுள்ளார். நம்மால் ஒருவர் துன்பப் படக்கூடாது துன்பப் படுபவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும் எனும் செய்திகளை இவரது கவிதைகள் வலியுறுத்துகின்றன.

அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் – 8
2. ப.35, வெளிநடப்பு, பழநிபாரதி, நான்காம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
3. ப.31, வெளிநடப்பு, பழநிபாரதி, நான்காம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17
4. ப.42, வெளிநடப்பு, பழநிபாரதி, நான்காம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17
5. ப.68, வெளிநடப்பு, பழநிபாரதி, நான்காம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17
6. ப.34, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
7. ப.38, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
8. ப.40, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
9. ப.37, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
10. ப.23, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
11. ப.49, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
12. ப.53, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.
13. ப.56, தனிமையில் விளையாடும் பொம்மை, பழநிபாரதி, மூன்றாம் பதிப்பு ஜூலை 2014, குமரன் பதிப்பகம், சென்னை 17.